உ

கணபதி துணை.

# நமச்சிவாயமாலை.

சிதம்பரம்

## குருநமச்சிவாயதேவர்

அருளிச்செய்தது.

இது

யாழ்ப்பாணத்து வண்ணைநகர்ச்

சுவாமிநாதபண்டிதரால்

சென்னபட்டணம்

சைவவித்தியாநுபாலனயந்திரசாலையில்

அச்சிற்பதிப்பிக்கப்பட்டது.

இரண்டாம் பதிப்பு.

பரிதாபி௵ சித்திரை௴.

இதன்விலை அணா - ௨.

கணபதிதுணை.

# நமச்சிவாயமாலை.

## காப்பு.

மந்திர நமச்சி வாய
மாலைநான் செப்பு தற்குக்
கந்தவே டனக்கு மூத்த
கணபதி காப்புத் தானே.

அறைமறை யயனு மாலும்
அமரரு முனிவர் தாமும்
முறைமுறை வணங்கி யேத்தும்
முதல்வனே நமச்சி வாய. (க)

ஆதியாய் வேத நான்காய்
அடிமுடி தெரியா வண்ணம்
சோதியாய் நிறைவாய் நின்ற
துணைவனே நமச்சி வாய. (உ)

இணையடி தேடிக் காணு
எழுல களந்த மாயன்
கணையதா வெயின்மூன் றெய்த
கடவுளே நமச்சி வாய (௩)

ஈட்டிய பொருள்போ லுன்றன்
இணையடி பணிவார் துன்பம்
வாட்டிய செம்பொன் மேனி
வள்ளலே நமச்சி வாய. (௪)

உமையொரு பாகம் வைத்த
உம்பர்க டம்பி ரானே
அமைதரு மணியே முத்தே
அண்ணலே நமச்சி வாய. (௫)

ஊனுமா யுயிரு மாகி
உள்ளுமாய்ப் புறம்பு மாகித்
தாணுவாய்ச் சகத்துக் கெல்லாம்
தந்தையா நமச்சி வாய. (௬)

எழுபிறப் பதனுன் மாழ்கும்
என்னுயிர்க் கிரங்கி வந்து
பழுதற வாண்டு கொள்ளும்
பரமனே நமச்சி வாய. (௭)

ஏடவிழ் கோதை மாதர்
இளமுலை மயக்கப் பட்டு
நீடுத லொழிக்க வல்ல
நிமலனே நமச்சி வாய. (௮)

ஐயமேற் றுண்டாய் பாதம்
அன்பிலேன் றலைமேல் வைத்த
செய்யனே வானோர் போற்றுந்
தேவனே நமச்சி வாய. (௯)

ஒன்பது வாயிற் கூட்டில்
ஒடுங்குயி ருய்யும் வண்ணம்
பொன்பொதி மலர்த்தாள் காட்டும்
புனிதனே நமச்சி வாய. (௧௦)

ஓமெனு மெழுத்தி னுள்ளே
ஒளியதாய் விளங்கு கின்ற
வாமனே கருணை நல்கும்
வள்ளலே நமச்சி வாய. (௧௧)

ஔவியம் பேசா வண்ணம்
அடிமையைத் தடுத்தாட் கொள்ளும்
திவ்விய மணியே முத்தே
தேவனே நமச்சி வாய. (௧௨)

அக்கினைப் பூண்டு கொண்டே
அரியவெண் ணீறு பூசும்
சொக்கனே செக்கர் மேனித்
தூயனே நமச்சி வாய. (கங)

கம்பமார் களிறு ரித்த
கச்சியே கம்பா செம்பொன்
அம்பலத் தாடு கின்ற
அண்ணலே நமச்சி வாய. (கச)

நகரம்போல் வளைந்து மூன்று
நாயினே னுணவு தேடும்
பகரொணு வின்ன றீர்க்கும்
பரமனே நமச்சி வாய. (கரு)

சத்தியுஞ் சிவமு மாகித்
தாணுவாய்ச் சகத்துக் கெல்லாம்
முத்தியே யளிப்பா யாதி
முதல்வனே நமச்சி வாய. (கசு)

ஞமனுட னிந்தி ரற்கும்
நாரணற் கார ணற்கும்
சமனுற முதலாய் நின்ற
தாணுவே நமச்சி வாய. (கஎ)

இடவிய கபால மேந்தி
எழிரண் டுலக மெல்லாம்
தடவியுங் காண வொண்ணுச்
சங்கரா நமச்சி வாய. (கஅ)

இணங்கிய கமலப் பொற்றுள்
இருவரு மேத்தி நின்று
வணங்கவும் பலத்து ளாடும்
வானவா நமச்சி வாய. (கசு)

தண்டமிழ் முனிவன் றன்னைச்
சமமுறத் தென்பா லேவும்
அண்டரோ டயன்மால் காணு
ஆதியே நமச்சி வாய. (உ0)

நஞ்சணி கண்டத் தானே
நதிமதிச் சடையி னானே
கொஞ்சுபச் சிளம்பெண் பாகங்
கொண்டவா நமச்சி வாய. (உக)

பண்டுல களந்த மாலும்
பங்கயத் தயனுந் தேடிக்
கொண்டுசென் றறிய வொண்ணுக்
குரவனே நமச்சி வாய. (உஉ)

மங்கையோர் பாகம் வைத்து
வளர்பிறை முடிமேல் வைத்துச்
செங்கையின் மழுமான் வைத்த
தேவனே நமச்சி வாய. (உ௩)

இயக்கரு முனிவர் தாமும்
இருகரங் குவித்து நின்று
வியக்கவம் பலத்தி லாடும்
விமலனே நமச்சி வாய. (உ௪)

அரகர சிவனே யென்றும்
அம்பலத் தாடி யென்றும்
பரவுவார் துயரந் தீர்க்கும்
பரமனே நமச்சி வாய. (உ௫)

இலவிதழ் மடவார் தங்கள்
ஏவலுக் குரிய னாகி
அலமரு மென்னை யாண்ட
அமலனே நமச்சி வாய. (உ௬)

வளமுறு மங்கை தன்னை
மற்றிடப் பாகம் வைத்தே
ஒளிமதிக் கீற்றைச் சூடும்
ஒருவனே நமச்சி வாய. (உ௭)

அழகிய முருக னுக்கோர்
   ஆறுமா முகமுங் கூர்மை
பழகிய வேலு மீந்த
   பரமனே நமச்சி வாய. (உஅ)

இளமையு மூப்பு மில்லா
   இறைவனே யெம்பி ரானே
வளமையாங் கருணை யோன
   வள்ளலே நமச்சி வாய. (உகூ)

அறவனே பாதந் தேடி
   அன்றிரு வோருங் காணு
இறைவனே யென்னைக் காக்கும்
   ஈசனே நமச்சி வாய. (௩0)

அனந்தவி னின்ருள் போற்றி
   அருச்சிக்கு மடியார் தங்கள்
இனந்தனி லென்னை வைப்பாய்
   ஈசனே நமச்சி வாய. (௩க)

கரியுரி யதனைப் போர்த்துக்
   கபாலமுங் கையி லேந்தித்
திரிபுர தகனஞ் செய்த
   தேவனே நமச்சி வாய. (௩உ)

காலனை யுதைத்த காலா
காமனை யெரித்த கண்ணா
பாலனைக் கறிய தாக்கும்
பரமனே நமச்சி வாய. (௩௩)

கிளிமொழி யமுதச் செவ்வாய்க்
கெவுரியைப் பாகம் வைத்த
ஒளிமதிச் சடையி னானே
ஒருவனே நமச்சி வாய. (௩௪)

கீண்டுவெற் பெடுத்த வீரக்
கேடிலா வரக்கன் றன்னை
மாண்டுக விரலா லூன்றும்
வள்ளலே நமச்சி வாய. (௩௫)

குழைகுமி ழடருங் கண்ணாள்
கோதையைப் பிரிந்த போது
பிழைசெயு மதனைக் காய்ந்த
பிஞ்சகா நமச்சி வாய. (௩௬)

கூவிள மறுகு தும்பை
கொன்றைவெள் ளெருக்கூ மத்தை
மேவிய சடையி னானே
வித்தகா நமச்சி வாய. (௩௭)

கெங்கையைச் சடைமேல் வைத்துக்
கெவுரியைப் பாகம் வைத்தல்
அங்கணு நீதி யோசொல்
ஐயனே நமச்சி வாய. (௩அ)

கேசவன் வணங்கிக் கண்ணுங்
கேழ்கிளர் கஞ்சகுஞ் சூட்ட
ஆசியோ டாழி யீந்த
அமலனே நமச்சி வாய. (௩௯)

கைச்சிலை மேரு வாகக்
கரியமால் பகழி யாக
உச்சிதப் புவித்தே ரேறும்
ஒருவனே நமச்சி வாய. (௪0)

கொற்றவன் றனக்கு முன்னே
குதிரையி லேறிக் காட்டிப்
பொற்றுகில் கோலாற் கொள்ளும்
பூரணு நமச்சி வாய. (௪௧)

கோணமா மலையில் வாழுங்
கோதிலா வாதி யேநீ
ஆணல்லை பெண்ணு மல்லை
அத்தனே நமச்சி வாய. (௪௨)

சந்திரன் விளங்குஞ் சென்னித்
தலைவனே தம்பி ரானே
இந்திர னிமையோர் போற்றும்
இறைவனே நமச்சி வாய. (உ௩)

சாந்தணி முலையா டன்னைத்
தண்புன லெனப்பேர் மாற்றி
எந்துசெஞ் சடையெம் மானே
இறைவனே நமச்சி வாய. (உச)

சிரமது கையி லேந்திச்
சீரிய முனிவர் தங்கள்
விரகினை யழித்த மேரு
வில்லியே நமச்சி வாய. (உரு)

சீதள கமல வாவித்
திருநாவ லூரன் றன்னைச்
சாதனங் காட்டி யாண்ட
தாணுவே நமச்சி வாய. (உசா)

சுத்தவெண் ணீறு பூசிச்
சுடலையி னடன மாடும்
அத்தனே யாரூர் வாழும்
அண்ணலே நமச்சி வாய. (உஎ)

சூரியன் றுயரந் தீர்த்தாய்
தோன்றிமுப் புரத்தைச் சுட்டாய்
ஆரிய வெள்ளி வெற்பின்
அத்தனே நமச்சி வாய. (சஅ)

செஞ்சிலை கையி லேந்திச்
சிரித்துமுப் புரமெ ரித்தாய்
தஞ்சமென் றுனைய டைந்தேன்
தாணுவே நமச்சி வாய. (சகூ)

சேதன வடியா ரோடு
திருப்பெருந் துறையில் வந்து
வாதவூ ரரசை யாண்ட
வாதனே நமச்சி வாய. (ருO)

சைவனே யைம்பு லங்க
டமைமணஞ் சாரா வண்ணம்
கைவர மருள வேண்டுங்
கடவுளே நமச்சி வாய. (ருக)

சொரிமலர்க் கொன்றை தும்பை
சொல்லிய வறுகு தாளி
விரிமலர்ச் சடையாய் வெள்ளி
வெற்பனே நமச்சி வாய. (ருஉ)

சோலைசூ ழால வாயிற்
சோதியே சமணை மாய்க்கப்
பாலரு வாயி ஞர்க்காப்
பரிந்தரு ணமச்சி வாய. (௫௩)

தந்தையுந் தாயு மில்லாத்
தாணுவே யாண்பெண் ணல்லாய்
இந்திர னயன்மால் போற்றும்
இறைவனே நமச்சி வாய. (௫௪)

தாதவிழ் கொன்றை தும்பை
சங்கொடு தலையுங் கொண்ட
நாதனே வேத மோது
நம்பனே நமச்சி வாய. (௫௫)

திரிபுர மெரித்த மூர்த்தி
தென்னவன் முன்னே முன்னாள்
நரிதனைப் பரிய தாக்கு
நம்பனே நமச்சி வாய. (௫௬)

தீதிலா வாத வூரர்
செய்கைகண் டுளம கிழ்ந்த
நாதனே பரனே வானோர்
நண்பனே நமச்சி வாய. (௫௭)

துணைவனே யன்பர் தங்கள்
துன்பறுத் தருளு மூர்த்தி
பிணைமுலை யுமையாள் பங்கா
பரமனே நமச்சி வாய. (கஅ)

தூதுசுந் தரற்காச் சென்ற
சோலைசூ ழாரு ரையா
ஆதியே யரனே வெள்ளி
யசலனே நமச்சி வாய. (ககூ)

தென்னவ னாகக் கூடற்
சேர்ந்துசெங் கோல்செ லுத்தி
அந்நகர் தன்னை யாண்ட
அமலனே நமச்சி வாய. (கூ0)

தேடியே யிருவர் காணுத்
திருவடி மனத்துள் யாரும்
நாடியே வணங்க நின்ற
நம்பனே நமச்சி வாய. (கூக)

தையலோர் பாகம் வைத்துச்
சடையிலே கங்கை வைத்த
அய்யனே யாரூர் வாழும்
அண்ணலே நமச்சி வாய (கூஉ)

சொல்லுல கெல்லாம் போற்றும்
  சோதியே சூல பாணீ
வில்லென மேரு வாங்கும்
  வித்தகா நமச்சி வாய. (கரு)

தோத்திரஞ் செய்மா யற்குச்
  சுடரொளி யாழி யீந்த
ஆத்தனே யடிய ரன்பிற்
  களியனே நமச்சி வாய. (கச)

நஞ்சினை யருந்தி மாயன்
  நான்முகன் முதலோர் நாண
அஞ்செழுத் துருவ மான
  அத்தனே நமச்சி வாய. (கரு)

நாரண னலரோ னிந்த்ரன்
  நாடிமுன் வணங்கி நின்றே
ஆரண மோது கின்ற
  ஆதியே நமச்சி வாய. (கசு)

நிற்பவர் நெறியை நோக்கி
  நெஞ்சைவிட் டகலா தானே
கற்பனை கடந்த சோதிக்
  கடவுளே நமச்சி வாய. (கஎ)

நீறணி மேனி யானே
நிமலனே யமரர் கோவே
ஆறணி சடையி னானே
அண்ணலே நமச்சி வாய. (சுஅ)

நுண்ணிடை மாது பாகா
நோக்குவார் தம்மை நோக்குங்
கண்ணுதற் பரனே தேவா
கடவுளே* நமச்சி வாய. (சுகூ)

நூபுர பதமா தோடு
நுவலருஞ் சடை யிலாடும்
மாபுரத் தவர்கள் காலா
வானவா நமச்சி வாய. (எ0)

நெஞ்சக மலரி லுன்னை
நினைவற நினைந்த பேருக்
கஞ்சலென் றருளிச் செய்யும்
அண்ணலே நமச்சி வாய. (எக)

நேத்திரந் தன்னால் வேளை
நெருப்பெழச் சுட்டு விட்டாய்
சாத்திர முனிவோர் போற்றுந்
தாணுவே நமச்சி வாய. (எஉ)

---

* தேவர்கடவுளே என்றும் பாடமோதலாம்: தேவர்கடவுள் - தேவதேவன் என்றபடி.

நைந்துனை நினைப்பார் பாவம்
 நாசம தாக்கி நிற்பாய்
பைந்தொடி பாகங் கொண்ட
 பரமனே நமச்சி வாய. (எ௩)

நொந்தவ ரிளைத்தோர் தம்மை
 நொடியள வினில்வாழ் விக்கும்
கந்தரங் கறுத்த மூர்த்தீ
 கடவுளே நமச்சி வாய. (எச)

நோக்கமூன் றுடையா யென்னை
 நோக்கியே துரியா தீதத்
தூக்கத்தில் வைப்ப தென்றோ
 சொல்லுவை* நமச்சி வாய. (எரு)

நௌவியை யேந்துங் கையாய்
 நயமுட னடியார் தங்கள்
வெவ்வினை யெல்லாந் தீர்க்கும்
 விமலனே நமச்சி வாய. (எசு)

பத்தராய்ப் பணிவார் தம்மைப்
 பதங்கொடுத் தாளு மையா
சுத்தனே வேதஞ் சொன்ன
 துணைவனே நமச்சி வாய. (எஎ)

---

* சொல்லுக, சொல்லுவாய் என்பாருமுளர்.

பாடுவார் மூவர் தம்மைப்
பதங்கொடுத் தாண்ட மூர்த்தி
தேடுவார் தேடு கின்ற
செம்பொனே நமச்சி வாய. (எஅ)

பிறையணி சடையி னானே
பிஞ்சகா வடியார்க் கெல்லாம்
குறைவற வாழ்வ ளிக்குங்
கொற்றவா நமச்சி வாய. (எகூ)

பீடுறப் பூசிப் பார்தம்
பெருவினை யறுக்கு மூர்த்தீ
ஆடல்சே ரெருதி லேறும்
அண்ணலே நமச்சி வாய. (அ0)

புகலுறுங் கல்லா லன்பு
பூண்டெறி சாக்கி யற்குத்
தகவுற முத்தி நல்குந்
தாணுவே நமச்சி வாய. (அக)

பூசுவெண் ணீறு பொங்கப்
பொருவிலா வம்மை காண
நேசமோ டாலங் காட்டில்
நிருத்தஞ்செய்* நமச்சி வாய. (அ௨)

---

* நிருத்தனே என்று பாடமோதுவாருமுளர்.

பெண்ணமு தனையார் நாணும்
  பெட்புறு வளையுந் தூசும்
எண்ணுறு பலியாக் கொண்ட
  இறைவனே நமச்சி வாய. (௮௩)

பேயுடன் காட்டி லாடும்
  பிஞ்சகா பெரியோர் தங்கள்
தூயநன் மனத்து ளானே
  சுத்தனே நமச்சி வாய. (௮௪)

பையர வணையிற் றங்கும்
  பாரளந் தோற்குப் பாதி
மெய்யளித் தருள்கூர்ந் திட்ட
  விண்ணவா நமச்சி வாய. (௮௫)

பொசியுறு தேம்பூஞ் சோலைப்
  புகலியிற் பிள்ளை யார்க்குச்
சசியொளி முத்தின் பந்தல்*
  தந்தவா நமச்சி வாய. (௮௬)

போதக மாகி வந்த
  புன்மைசே ரசுரன் றன்னை
னோதக வுரித்துப் போர்த்த
  நுண்ணியா நமச்சி வாய. (௮௭)

---

* பந்தர் என்று பாடமோதுவாருமுளர்.

பௌவத்திற் சிலையோ டாழும்
படியமண் செய்ய வப்பர்க்
கெவ்வம தகற்றிப் பேற
தீந்தவா நமச்சி வாய. (அஅ)

மறுவறு மாதி சைவ
மரபிற்சுந் தரற்குத் தூதாய்ச்
செறிநிசி பரவை வாயிற்
சென்றவா நமச்சி வாய. (அகூ)

மான்மழுக் கையி லேந்தி
வன்னியோர் பாகம் வைத்தே
ஆன்முது கேறுஞ் சோதி*
ஐயனே நமச்சி வாய. (கூ0)

மிடற்றினிற் காள கூட
விடத்தினைக் கலுக்க வைத்தாய்
நடத்தினில் விருப்பம் வைத்தாய்
நம்பனே நமச்சி வாய. (கூக)

மீனென வந்த மாயன்
விழியினை யிடந்து சாத்தி
ஆனதோர் மேனி நல்கும்
அண்ணலே நமச்சி வாய. (கூஉ)

---

* இதனை, சோதீஎன விளிப்பினும்பொருந்தும்.

முன்னமே பிரமன் றன்னை
முனிந்ததோர் தலைய றுத்தாய்
என்னைவந் தாண்டு கொள்வாய்
ஈசனே நமச்சி வாய. (௯௩)

மூர்க்கனுந் தக்கன் வேள்வி
முன்புசென் றழித்து வெற்றி
மார்க்கங்கண் டிட்ட சோதி*
வானவா நமச்சி வாய. (௯௪)

மெலிவிலாத் தவத்தோர் கோப
மேலுற முன்னாள் விட்ட
புலிதனை யுரித்துச் சாத்தும்
புண்ணியா நமச்சி வாய. (௯௫)

மேயபே ருணர்விற் கெட்டா
வெளியதா யணுவு மாகி
ஆயசிற் சொரூப மான
அண்ணலே நமச்சி வாய. (௯௬)

மையுறு குழலாள் கூடல்
மங்கையர்க் கரசி யார்முன்
செய்குறும் பணிக்கு வந்த
தேவனே நமச்சி வாய. (௯௭)

---

* இதனை, சோதி என விளியாக்கினுமமையும்.

மொழிதரு நால்வர் தங்கள்
முதுமறைத் தமிழ்ப்பா மாலை
ஒழிவின்றிச் சூடிக் கொள்ளும்
ஒருவனே நமச்சி வாய. (கூஅ)

மோகினி வடிவங் கொண்ட
முகில்வண்ணன் றன்னைச் சேர்ந்து
சோகமி லைய னுரைத்
தோற்றியோய் நமச்சி வாய. (கூகூ)

மௌவலங் குழலார் மோக
வலையறுத் துயர்சித் தாந்தச்
செவ்வையா முத்தி யென்று
சித்திக்கு நமச்சி வாய. (க00)

நமச்சிவாயமாலை
முற்றுப்பெற்றது.